# செய்தி வெளியீடு

2025-2026-ஆம் கல்வியாண்டிற்கான புதுக்கோட்டை மாவட்டத்தின் அரசு மருத்துவக் கல்லூரியிலுள்ள மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப்பிரிவுகளில் (Allied Healthcare Certificate Courses) மாவட்ட அளவிலான சேர்க்கை வாயிலாகவும், அதனைத் தொடர்ந்து முன் விண்ணப்பமில்லா நேரடி சேர்க்கை முறையிலும் நடைபெறும் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

1. **வழங்கப்படும் சான்றிதழ் பயிற்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | கார்டியோ சோனாகிராபி டெக்னீஷியன் (பெண்) | 1 வருடம் |
| 2. | ஈசிஜி டிரெட் மில் டெக்னீஷியன் | 1 வருடம் |
| 3. | அவசர சிகிச்சை டெக்னீஷியன் | 1 வருடம் |
| 4. | டயாலிசிஸ் டெக்னீசியன் | 1 வருடம் |
| 5. | மயக்க மருந்து டெக்னீஷியன் | 1 வருடம் |
| 6. | தியேட்டர் டெக்னீஷியன் | 1 வருடம் |
| 7. | எலும்பியல் டெக்னீஷியன் | 1 வருடம் |
| 8. | மருத்துவ பதிவேடு டெக்னீஷியன் | 6 மாதங்கள் |
| 9. | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் | 1 வருடம் |

2. **காலியிடங்கள்**

இம்மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் சான்றிதழ் படிப்புகளுக்கு மொத்தமாக 94 இடங்கள் காலியாக உள்ளன. காலியிடங்கள் தொடர்பான விவரங்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் அறிவிப்பு பலகையிலும் https://gpmch.ac.in/ என்ற இணையதளத்திலும் கிடைக்கப்பெறும்.

| வ. எண். | சான்றிதழ் பயிற்சிகள் | Total |
|---|---|---|
| 1. | கார்டியோ சோனாகிராபி டெக்னீஷியன் (பெண்) | 7 |
| 2. | ஈசிஜி டிரெட் மில் டெக்னீஷியன் | 9 |
| 3. | அவசர சிகிச்சை டெக்னீஷியன் | 9 |
| 4. | டயாலிசிஸ் டெக்னீசியன் | 9 |
| 5. | மயக்க மருந்து டெக்னீஷியன் | 7 |
| 6. | தியேட்டர் டெக்னீஷியன் | 6 |
| 7. | எலும்பியல் டெக்னீஷியன் | 19 |
| 8. | மருத்துவ பதிவேடு டெக்னீஷியன் | 11 |
| 9. | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் | 17 |
| | **மொத்தம்** | **94** |

3. **தகுதி**

I. 31.12.2025 அன்று விண்ணப்பதாரர் 17 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும்.

II. தெரிவுக் / தேர்வுக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறாக பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

III. இட ஒதுக்கீடு:- சேர்க்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கான 5% இடஒதுக்கீடு உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் இட ஒதுக்கீட்டு நடைமுறை பின்பற்றப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை (கட்டணமில்லை)**

மாவட்ட ஆட்சியர் அலுவலக உதவி மையத்திலும், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியின் முதல்வர் / துணை முதல்வர் அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவங்கள் கட்டணமின்றி வழங்கப்படும். உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 12.09.2025 அன்று அல்லது அதற்கு முன்னர், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியின் முதல்வர் / துணை முதல்வர் அலுவலகத்தில் அளிக்கப்பட வேண்டும்.

5. **அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பம் பெறப்படும் நாள் | 08.09.2025 முதல் 12.09.2025 வரை |
| 2. | தகுதிப்பட்டியல் வெளியிடப்படும் நாள் | 16.09.2025 |
| 3. | பாடப்பிரிவில் சேரும் நாள் | 20.09.2025 |
| 4. | நேரடி மாணவர் சேர்க்கை நடைபெறும் நாள் | 22.09.2025 லிருந்து |
| 5. | முழு மாணவர் சேர்க்கை செயல்முறை நிறைவுப்பெறும் நாள் | 30.09.2025 |
| 6. | வகுப்புகள் தொடங்கும் நாள் | 06.10.2025 |

6. **கலந்தாய்வு நடைபெறும் இடம்**

அரசு மருத்துவக் கல்லூரி, புதுக்கோட்டை.

7. **தேவைப்படும் ஆவணங்கள்**

i. மேனிலைப்பள்ளி மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
ii. மாற்று சான்றிதழ்
iii. இருப்பிடச் சான்றிதழ் (பொருந்துமாயின்)
iv. சாதிச் சான்றிதழ்
v. வயதுச் சான்று (பிறப்புச் சான்றிதழ் / பள்ளிச் சான்றிதழ்)
vi. மாவட்ட மருத்துவ வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளி சான்றிதழ் (பொருந்துமாயின்)
vii. ஆதார் அட்டை அல்லது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

8. தெரிவு செய்யும் நடைமுறை பரிந்துரைக்கப்பட்ட விதிகளின்படி முற்றிலும் தகுதி மற்றும் வகுப்புவாரி இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அமையும். கலந்தாய்வின் போது ஒதுக்கீடு ஆணைகள் அந்த இடத்திலேயே வழங்கப்படும்.

9. சுகாதாரத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் திறன் அடிப்படையிலான சான்றிதழ் பாடப்பிரிவுகளில் பயில்வதற்கு இந்த வாய்ப்பை தகுதியுள்ள மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

10. இந்தப் பாடப்பிரிவுகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள், பொருந்தக் கூடிய விதிகளுக்குட்பட்டு, "வெற்றிநிச்சயம்" திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்களாக இருக்கலாம்.

11. உதவி மைய தொலைபேசி எண்கள் 8098346288

12. மின்னஞ்சல் முகவரி (விசாரணைக்கு) vppdktmc@gmail.com

வெளியிடுவோர்

முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, புதுக்கோட்டை.

நாள் : 04.09.2025

இடம் : புதுக்கோட்டை.